# தொட்டையாசார்யர்
# வாழி திருநாமம்

மாசி உத்திராடத்தில் வந்துதித்தான் வாழியே
மாசில் புகழ் பெரியப்பன் மகிழ்ந்த மைந்தன் வாழியே
தேசெங்கும் பரவாதிசயம் படைத்தான் வாழியே
தரிசனத்தை உத்தரித்துத் தெளிவித்தான் வாழியே
ஆசில் எதிராசர் நிகரான குரு வாழியே
ஐந்து விஷயங்களும் அருளினான் வாழியே
தூசில் வாதூல குலம் துலங்க வந்தோன் வாழியே
தூய மகாதேசிகனார் துணை பதங்கள் வாழியே

---